கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[சி-9729]

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம்.
[சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 11 திங்கட்கிழமை (26 - 12 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 30

# புனர்வாழ்வு நடவடிக்கைகள், பாதை திறத்தல் அடுத்த கட்டப் பேச்சுக்களில் ஆராயப்படும்!

## அமைச்சர் அனுருத்த தகவல்

கொழும்பு, டிசம்பர் 26

ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது.

வடபகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்யும் பாப்பரசரைத் தரிசிக்க வடபகுதி மக்கள் தெற்கே வருவதற்கு வசதியாக ஆனையிறவுப் பாதையைத் திறப்பது ஆகியவிடயங்கள் முக்கிய இடத்தைப் பெறும் என ஸ்ரீலங்கா பாதுகாப்பு பிரதியமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு மாவலி மத்திய நிலையத்தில் அமைச்சர் ரத்வத்தையைச் சந்தித்தபோது அவர் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இயல்பு நிலையை ஏற்படுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உலக மக்களுக்கு நத்தார் செய்தி

## யுத்தங்களை நிறுத்த பாப்பரசர் கோரிக்கை

வத்திக்கான், டிச. 26

உலகில் அப்பாவி மக்களின் உயிர்களை பலி கொள்ளும் சகல மோதல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது நத்தார் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகமே ஒரு குடும்பம். மனித குலத்தவர் அனைவருமே இந்த மாபெரும் குடும்பத்தின் அங்கத்தவர்கள் சுயநலப் போக்கினாலும், அர்த்தமற்ற வன்செயல்களினாலும் இந்தக் குடும்பம் முழுவதுமே இன்னல்களை அனுபவித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகெங்கும் பரந்து வாழும் 96 கோடி றோமன் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் என்ற வகையில் 17 ஆவது நத்தார் பண்டிகையை கொண்டாடும் பரிசுத்த பாப்பரசர் வத்திக்கானிலிருந்து 54மொழிகளில் தனது நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

பரிசுத்த பாப்பரசர் பிலிப்பீன்ஸ், பப்புவா நியுகினி, ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளார்

பாப்பரசராக வந்த பின்னர் அவர் மேற்கொள்ளும் 63 ஆவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். (உ-ஐ)

## புகையிலை ஏற்றிச் சென்ற இழுவைப் படகே மூழ்கியது:

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். தீவுப்பகுதியில் இருந்து திருகோணமலைக்கு புகையிலை ஏற்றிக் கொண்டு சென்ற ''தாரா'' என்ற இழுவைப் படகே முல்லைத்தீவுக் கடலில் மூழ்கிக் கொண்டிருந்ததாக கொழும்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்குத் தகவல் கிடைத்தது.

— கொழும்பு பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

சிங்கப்பூரில் உள்ள கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான இந்தப் படகில் ஏற்பட்ட ஒழுக்கே அது மூழ்கத் தொடங்கியதற்கு காரணம் என்று சொல்லப்பட்டது. படகில் இருந்த 9 மாலுமிகள் மீன்பிடிப் படகுகளின் உதவியுடன் கரைசேர்ந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டுக்கு

## சிங்கள அறிஞர்களுக்கும் இம்முறை அழைப்பு இல்லை

கொழும்பு, டிச. 26

உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளின் போது இலங்கையிலிருந்து சிங்கள அறிஞர்களையும் அழைத்து, அவர்கள் சமர்ப்பிக்கும் தமிழியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை மாநாட்டில் படிக்க அனுமதிப்பது வழமை என்றும் —

ஆனால் இம்முறை சிங்கள அறிஞர்களும் ஒரேயடியாகப் புறக்கணிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலேசியாவில் நடைபெற்ற முதலாவது மாநாட்டில் தவத்திரு ஹிஸ்ஸலே தர்மரத்தின தேரர், கலாநிதி சத்தா மங்கள கருணாரத்ன ஆகியோரும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி 10 முதல் 25 வரை யுத்த நிறுத்தம் அமுலுக்கு?

கொழும்பு, டிச. 26

★ அரசுப் படைகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

★ பாப்பரசரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு, ஜனவரி 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு வருகின்றது

அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழான 'திவயின, இத்தகவல்களை வெளியிட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுக்களில் இராணு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரை தரிசிக்க வடக்கிலிருந்து 7,000 கத்தோலிக்கர் தெரிவாவர்

கொழும்பு, டிச. 26

கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கும் பரிசுத்த பாப்பரசரை தரிசிப்பதற்கு வடபகுதியைச் சேர்ந்த ஏழாயிரம் கத்தோலிக்க மக்களுக்கு வசதி செய்யப்படும் என்று ஆயர் வண. மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

வடக்கேயுள்ள திருச்சபைத் தேவாலயங்களில் இருந்து ஏழாயிரம் கத்தோலிக்க மக்களைக் கொழும்புக்குக் கூட்டி வருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது —

இவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும். இவர்களது கொழும்பு வருகை மிக அவதானத்துடன் மேற்கொள்ளப்படும் —

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வாகரை கண்ணிவெடித் தாக்குதலால் இராணுவ நடவடிக்கை முறியடிப்பு!

யாழ்ப்பாணம், டிச. 26

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் படையினர் மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கை ஒன்று நேற்று முன்தினம் விடுதலை புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் காரணமாக முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்ணி வெடித் தாக்குதல் சம்பவத்தில் ஐந்து படையினர் உயிரிழந்தது தெரிந்ததே

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :-

நேற்று முன்தினம் [illegible] மட்டக்களப்பு பனிச்சங்கேணி முகாமில் இருந்து இராணுவத்தை முகாமுக்கு வந்து அங்கிருந்து வாகரை காட்டுப் பகுதிக்குள் செல்ல படையினர் முயன்றனர்.

வாகரைப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற் கொள்வதற்காகவே மூன்று பஸ்கள், கனரக வாகனம், ட்ரக் ஆகியவற்றில் படையினர் அப்பகுதிக்கு வந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் கடந்த சனியன்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்திய தொழிற்திறமை விருது — சேவைச் சான்றிதழ்கள் வழங்கும் விழாவில் எடுக்கப்பட்ட படம் இது. இடமிருந்து வலமாக யாழ். றோட்டறிக் கழகத்தின் தொழில் திட்ட இயக்குநர் றோட்டேரியன் ஆர் எஸ். செல்வநாதன் உரையாற்றுவதையும், அவருக்கு அருகில் தொழிற் திறமை விருதுபெற்ற உடுவில் வாழ்வகத்தைச் சேர்ந்த செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி, அச்சு இயந்திர திருத்துநர் திரு மூத்துக்கிருஷ்ணர் அற்புததேவன் (மாயவர்), யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் திரு. ஈ. சரவணபவன், றோட்டறிக் [illegible] தொழிற் திறமை விருதுபெற்ற இசையமைப்பாளர் திரு. முத்துக்குமாரு கண்ணன், ஸ்கிறீன் பிறின்டிங் நிபுணர் திரு ஆசைப்பிள்ளை ஞானசேகரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.


### காரைதீவில தேடுதல்!

யாழ்ப்பாணம், டிச 26

மட்டக்களப்பு காரைதீவுப் பிரதேசம் கடந்த புதனன்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதலின்போது அப்பகுதியைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் பொலிஸ் அதிரடிப் படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிரமாக விசாரிக்கப்பட்டனர். (ஐ)

## 4வார மயக்க நிலையின்பின் ஜெயில்சிங் காலமானார்



புதுடில்லி, டிச. 26

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஜியானி ஜெயில் சிங் நேற்று காலமானார். அவருக்கு வயது 78.

கடந்த 29 ஆம் திகதி கார் விபத்து ஒன்றில் சிக்கி, மயக்கமுற்ற நிலையில் சண்டிகர் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட அவர், சுமார் நான்கு வாரகாலம் 'கோமா' நிலையிலிருந்த பின்னர் நேற்றுக் காலை 7.40 மணிக்கு காலமானார்.

இந்திய மத்திய அரசும், பஞ்சாப்—ஹரியானா, ஜம்மு — காஷ்மீர் அரசுகளும் ஏழுநாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அறிவித்துள்ளன.

1972 இல் பஞ்சாப்பின் முதலமைச்சராகவும், 1980 இல் மத்திய அமைச்சராகவும் பணிபுரிந்த ஜெயில் சிங் 1982 ஜூலை முதல் 1987 வரை இந்திய ஜனாதிபதியாகப் பதவி

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை

## அபிவிருத்திநிதி ரூ.10கோடி மட்டு. மாவட்டம் இழந்தது!

கொழும்பு, டிச. 26

மட்டக்களப்பு மாவட்ட புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10 கோடி 20 லட்சம் ரூபா திறைசேரிக்கு திருப்பிச் செல்லும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கென இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு—செலவுத் திட்டம், மூலதன விருத்தித் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட புனர்வாழ்வு — புனரமைப்புத் திட்டம் (நோராட்), பிரதேச செயலக உதவித் திட்டம் என்பவற்றின் கீழும், ஆசிய அபி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாதியர் இன்று முதல் வேலை நிறுத்தம்?

கொழும்பு, டிச. 26

சம்பள உயர்வு மற்றும் அதிக வசதிகள் கோரி சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையில இறங்கியிருக்கும் அரச ஆஸ்பத்திரி தாதியர்கள், தமது கோரிக்கைகளை அரசு சாதகமாகப் பரிசீலிக்காவிட்டால், இன்று அல்லது நாளை முதல் முழு வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர்

பொது சேவை ஐக்கிய தாதிகள் சங்கம் இத்தகைய எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

தாதியரின் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையால் தெற்கில் பல ஆஸ்பத்திரிகளில் பல்வேறு மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தாதியரின் கோரிக்கைக்கு அரசு சுமுகமான தீர்வு ஒன்றைக் காண விட்டால் —

தாதியர் வேலை நிறுத்தத்தில் குதிப்பது தவிர்க்க முடியாது என்றும்—

[6 ஆம் பக்கம் பார்க்க]

பேரரசி வண்ணச் சோலை
ஸ்தாபனத்தாரின்
புதுவருட மகத்தான
மலிவு விற்பனை
23 - 12 - 1994 முதல்
கொழும்பிலிருந்து
புதிதாகத் தருவிக்கப்பட்ட
சேலை வகைகள், சேட்டிங், கிப்ஸ் சாரம், பொலியஸ்ரர், சீத்தை, பப்ளின், சில்க் பொலியஸ்ரர்
இன்னும் பல வகை புடைவைத் தினுசுகள்
○ தரம் உத்தரவாதம் ○
✶ இன்றே விஜயம் செய்யுங்கள் ✶
பேரரசி வண்ணச்சோலை
(மகாராணி)
யாழ்ப்பாணம். (சி-10100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கல்வியாண்டு - 95/96**

பின்வரும் கற்கை நெறிகள் யாழ்ப்பாணத்தின் முன்னணி விரிவுரையாளர்களைக் கொண்டு ஆரம்பமாகிறது.

**01 - 01 - 1995**

கலை முதல் தேர்வு – G. A. Q.

★ க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ பேராதனை கலைமாணி பட்டப் பாடநெறி ஆயின் 180 புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

★ விண்ணப்ப முடிவு திகதி: **01-01-1995**

மேலதிக விவரங்களுக்கு:

**நிரு பட்டப்படிப்பு பிரிவு**
**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்.

(சி-55)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 27-05-1989 — உதிர்வு: 26-11-1994

### செல்வி கீர்த்திகா மயில்வாகனம்


துள்ளித் திரிந்து பள்ளி சென்று
பாடித் திரிந்த கீர்த்தி – நீ
மழலை கொண்ட கோலத்தில்
காலன் கவர்ந்து கொண்டதேன்? – உன்
கள்ளமில்லா வெள்ளை உள்ளம்
கொள்ளை போனதேனோ?

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, தம்பி, தாத்தா,
அம்மம்மா மற்றும் உறவினர்கள்.

வண். மேற்கு,
யாழ்ப்பாணம்.

[34365]

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் வைத்திலிங்கம் கந்தையா

மலர்வு: 1920—04—04 — உதிர்வு: 1994—01—05

திதி: 1994 - 12 - 26

பெற்றெடுத்துப் பெயரிட்டுப் பேணிக் காத்துப் பிரியமுடன் வளர்த்த எம் தந்தையே!

நீங்கள் முற்றியது கடமை என்றோ ஓடிச் சென்றீர்கள். முழுப்பணியும் தான் இன்னும் ஓயவில்லை ஐயா! ஆண்டுகள் ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமே ஐயா எம்மிதயம். மீண்டு வரும் நினைவலையாய் உருகி அழும் எம் உள்ளம் எந்நாளும் உங்களையே எண்ணுதய்யா. இரும்பாக்கி எம்மனதை இருக்க நினைத்தாலும் கரும்பான உங்கள் நினைவுகளே கண்முன்னே நிழலாடுதய்யா. நடமாடும் வீட்டில் இன்று படமாகி விட்டீர்கள் ஐயா;

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

(8152)

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் 7 ஆம் ஆண்டுநினைவுவிழா

யாழ்ப்பாணம், டிச. 26

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் ஏழாம் ஆண்டு நினைவு தின விழா நிகழ்ச்சிகள் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்தவெளி அரங்கில் அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவைத் தலைவர் சமாதான நீதிவான் திரு. பொன்மதிமுகராசா தலைமையில் நடைபெறும்.

விழாவில் சிறப்புரைகள், கவியரங்கு, பட்டிமன்றம் ஆகியவற்றுடன் கரகாட்டம், வில்லிசை, நாடகம், நடனம், மெல்லிசை ஆகியனவும் இடம்பெறும். (க)

# பாண், மா விலைகள் அதிகரிக்கப்படமாட்டா

## அமைச்சர் அறிவிப்பு

பாண், மா ஆகியவற்றின் தற்போதைய விலைகளை அண்மைக்காலத்தில் அரசு அதிகரிக்காது.

வர்த்தகம் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்னா முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாவுக்கு தற்போது தட்டுப்பாடு கிடையாது. 30 ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமை மாவை ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திருகோணமலை பிரிமா ஆலை நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் மெற்றிக்தொன் மாவையே உற்பத்தி செய்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# ஆன்மீக அமைதி வேண்டி இமயமலை செல்லும் ரஜனி

## 4 மாதங்கள் தங்குவார்

சென்னை, டிச. 26

நடிகர் ரஜனிகாந்த் நான்கு மாதங்கள் இமயமலையில் தங்கியிருந்து ஆன்மீகத் துறையில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அதற்காக நான்கு மாதங்கள் படங்களில் நடிப்பதில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அவர் பம்பாய் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு படப்பிடிப்பு முடிவடைந்ததும் இமாலயத்தில், ரிஷிகேசத்தில் தயானந்த ஆஸ்ரமத்தில் தங்கி வந்துள்ளேன். ஆஸ்ரம சூழ்நிலையில் அமைதியைக் காண முடிகின்றது. ஆற்றங்கரை ஓரத்தில் தியானத்தில் மூழ்கி விடுவேன்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ)

# ஒளி விழா

யாழ்ப்பாணம், டிச. 26

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இன்று திங்கள் மாலை 5 மணிக்கு ஒளிவிழா இசையாராதனை நடைபெறும். இந்நிகழ்வில் மனித முன்னேற்ற நடு நிலைய பணிப்பாளர் அருட்திரு ஜெபநேசன் அடிகள் நற்செய்தி வழங்குவார். (ஐ-4)

# அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு டிச. 26

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் 1995 ஆம் ஆண்டுக்கான பாடசாலை வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படும். (ஐ-152)

# இலவசமாக புல் துண்டங்கள்

யாழ்ப்பாணம், டிச. 26

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காமதேனு விவசாய கால்நடை பண்ணையில் நெப்பியர் புல் துண்டங்களை கால்நடை வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது.

கோண்டாவிலில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் தொடர்பு கொண்டு புல் துண்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ஒ)

1995 ஜனவரியில்

# கிழக்கு பல்கலைக்கு 357புதியமாணவர் அனுமதி

கொழும்பு, டிச. 26

கிழக்கு பல்கலைக்கழகத்தில் அடுத்த மாதம் மேலும் 357 புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் துறைகளும் வருமாறு:

கலை — 164, விஞ்ஞானம்— 94 வர்த்தக, முகாமைத்துவம் — 83, விவசாயம் — 16.

புதிய மாணவர்களையும் சேர்த்து அடுத்த ஆண்டு ஆயிரத்து 58 உள்வாரி மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வர்.

இதேவேளை — வெளிவாரி மாணவர்களாக 272 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் தெரிவித்தார். (எ)

# தனது மூக்கு கண்ணாடியை விட்டு வந்த சட்டத்தரணி

## அதனால் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிச. 26

எதிரிகள் தரப்பு சட்டத்தரணி தனது மூக்குக் கண்ணாடியை நீதிமன்றத்துக்கு எடுத்து வர மறந்ததால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீர்கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இந்த சுவையான சம்பவம் இவ்வார முற்பகுதியில் இடம்பெற்றது.

சட்டவிரோதமாகக் கூடி கொள்ளையில் ஈடுபட்டதாக ஏழு பேருக்கு எதிராக சீதுவைப் பொலீஸார் தாக்கல் செய்திருந்த வழக்கு பிரதம நீதிவான் லலித் ஜெயசூரிய முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது எதிரிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிவானை நெருங்கி பவ்விய மாக ஏதோ கூறினார்.

அதையடுத்து "சம்பந்தப்பட்ட எதிர்த் தரப்பு சட்டத்தரணி மூக்குக் கண்ணாடியை எடுத்துவர தவறிவிட்டதால் பதிவுகளை பரிசிலனை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார். எனவே வழக்கை ஒத்திவைக்கக் கோருகிறார், கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது"—என சிரிப்புக்கு மத்தியில் அறிவித்தார். (உ)

# குண்டு வெடித்து வீடு சேதம்

கொழும்பு, டிச. 26

மன்னார் எருக்கலம்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றினுள் குண்டு வெடித்ததில் அந்த வீடு சேதமடைந்தது.

வீட்டு உரிமையாளர் விசாரணைக்காக பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். (ஐ-3)

# கண்ணி வெடிக்கு படை அதிகாரிகள் 10 பேர் பலி!

புதுடில்லி டிச. 26

ஜம்மு காஷ்மீர் பகுதியில் நேற்றுமுன்தினம்காலைஇடம் பெற்ற இரண்டு கண்ணி வெடிச் சம்பவங்களில் சிக்கி இந்திய இராணுவத்தின் 10 உயர் அதிகாரிகள் பலியாகினர். (ஐ-4)

# புதிய நூறு ரூபாய் நோட்டுக்கள்

கொழும்பு, டிச. 26

புதிய நிறத்துடன் கூடிய நூறு ரூபாய் நோட்டுக்களை மத்திய வங்கி புழக்கத்துக்கு விட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

1991 டிசம்பர் 23 ஆம் திகதி முதல் புழக்கத்துக்கு விடப்பட்ட நூறு ரூபாய் நோட்டுக்களின் ஒரு பக்கம், நிறத்தில் ஐந்நூறு ரூபா நோட்டுக்களை ஒத்திருந்தது. அதனால் மக்கள் மத்தியில் உண்டான குழப்பத்தை நீக்குமுகமாகவே புதிதாக அச்சிடப்பட்ட நூறு ரூபாய் நோட்டுக்களுக்கு நிற மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய நூறு ரூபாய் நோட்டுக்களின் ஒருபக்கம் ஒரேஞ்ச் மற்றும் மஞ்சள் நிறம் கொண்டவையாக இருக்கும்.

தற்போது புழக்கத்தில் உள்ள நோட்டுக்கள் தொடர்ந்து செல்லுபடியாகும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (உ)

# நிர்வாகசேவை பரீட்சை

கொழும்பு, டிச. 26

இலங்கை நிர்வாகசேவைக்கு அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# விராட்சிக்குளம் திருத்தம்

யாழ்ப்பாணம், டிச. 25

வடமராட்சி ஊரிக்காட்டு பகுதியிலுள்ள விராட்சிக்குளம் தேசநிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அவசர புனருத்தாரண நிதியிலிருந்து திருத்தப்பட்ட இக் குளம்ஆழமாக்கப்பட்டு அணைக்கட்டுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் நன்மையடைகின்றனர். (ஒ)

# செயலமர்வு

யாழ்ப்பாணம், டிச 26

யாழ்ப்பாணம், கல்வித் திணைக்களம், வலயம் – 2 ஐச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களுக்குமான செயலமர்வு இன்று திங்கட்கிழமை கோப்பாய் ம. வியில் காலை 8– 30 மணிமுதல் 4 – 30 மணிவரை நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# திருமலைக்கு இடமாற்றம்

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணிபுரிந்து வந்த சிற்றூழியர்கள் மூவர் அடுத்த வருடம் ஜனவரி முதல் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் திணைக்களம் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் மூடப்படுவது தெரிந்ததே. (ஒ-100)

# சலகூடம் அமைப்பு

பாடசாலைகளில் காணப்படும் சுகாதார சீர்கேடுகளை கருத்திற்கொண்டு அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலையில் தேசநிர்மாணிகள் ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி சலகூட தொகுதிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு இவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஒ)

# நம் ஆளுமையை நாமே விருத்தி செய்வது எப்படி?

*மிருசுவில் பொது நூலக அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட மாதாந்த அறிவியல் அரங்கின் எட்டாவது தொடரில் யாழ். மருத்துவ பீட உளவியல் விரிவுரையாளர் அருட்திரு. எஸ். டேமியன் அடிகளார் "ஆளுமை விருத்தி" எனும் தலைப்பில் நிகழ்த்திய பேச்சின் தொகுப்பு*

எல்லோரும் ஆளுமையுடன் இருக்கவிரும்புகிறோம். பெரும்பாலானவர்கள் கருதுவது போல் ஒருவரின் வெளிப் பண்புகள் ஆளுமை ஆக மாட்டா. அவை ஆளுமையின் ஒரு கூறு என்றே கூறலாம்.

அப்படியானால் ஆளுமை என்பதென்ன?

சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சிராக்கம், உடல் உள அறிவு, எண்ணம், உணர்வு நடத்தை என்பவற்றை எது நிர்ணயிக்கிறதோ, எமது சிந்தனையை மையப்படுத்துவது எதுவோ அதுவே ஆளுமை ஆகும்.

சிலர் எதிலும் ஒதுங்கிக் கொள்ளும் தன்மையுடையவர்களாகவும் வேறு சிலர் எதிலும் முன் நின்று உழைப்பவர்களாகவும் மற்றும் சிலர் சண்டைபோடுவதில் அக்கறை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் ஆளுமைக் கேற்பவே அவர்களின் வெளிப்பாடுகள் தோற்றமளிக்கும்.

ஒருவரின் ஆளுமை ஐந்து வயதில் வித்திடப்படுகிறது. அதைப் பொறுத்துத்தான் ஒருவரின் எதிர்காலம் அமைகிறது. பெற்றோர்களாலும், அயலவர்களாலும், உறவினர்களாலும் காட்டப்படும் அன்பு, ஆதரவு, உற்சாகம், பாராட்டல், பாதுகாப்பு என்பன குழந்தையின் உடல் உள வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். இவையாவும் நன்கு கிடைக்கப் பெற்ற குழந்தை சீரான நல்ல ஆளுமையுள்ள முழு மனிதனாக பரிணமிக்கின்றது.

குழந்தைகளைக் கண்டிக்கலாம். ஆனால் அது அளவுக்கு மிஞ்சக் கூடாது. குழந்தை எதை எதிர்பார்க்கிறதோ அது கிடைக்காத போது மனதில் [illegible] உருவாகிறது. ஒவ்வொரு எதிர்பார்ப்பும் நிறைவேறாமல் விட்டால் ஒவ்வொரு மன ஓட்டைகள் ஏற்படுகின்றன. இவை எதனால் ஏற்பட்டதோ அதனாலேயே சீராக்கவும் முடியும். மன ஓட்டைகள் சீராக்கப்படாவிட்டால் 50 வயதிலும் சரி 90வயதிலும் சரி அதன் தாக்கம் பிரதிபலித்துக் கொண்டே இருக்கும்.

அன்பும் அரவணைப்பும் இல்லாததால் ஏக்கத்துடன் வாழ்ந்தவர்கள் இன்று நாய்களையும், பூனைகளையும் முதுகில் தடவிக் கொடுத்து கொஞ்சிக் குலாவுவதைக் காணலாம்.

### ஆளுமை செயற்படும் மூன்று வழிகள்

ஆளுமை பற்றி ஆராய்ந்த உளவியலாளர் சிக்மன் பிராய்ட் மனித மனத்தைப் பகுப்பாய்வு செய்துபார்த்த போது ஆளுமை மூன்று வழிகளில் செயல்படுகிறது எனக் கண்டார், அவை 'இட்', 'அகம்' 'அதி அகம்' என்பனவாகும். 'இட்' என்றால், இன்பம் அனுபவித்தல். ஒன்றைக் கண்டவுடன் அதனை அடைய முயலும் இன்பத்தை மையமாகக் கொண்டது. இயல்பூக்கம் எனவும் சொல்லலாம். அடுத்தது 'அகம்' இது யதார்த்தத்தை உண்மையைக் காண்பதைக் குறிக்கிறது.

மற்றையது 'அதி அகம்'. இது ஒழுக்கத்தை மையமாக வைத்து இயங்கும். கட்டுப்பாடு மனச்சாட்சி என்பவற்றிற்கு முதலிடம் அளிக்கிறது. இதில் எதுவும் குறைந்து விடக் கூடாது. எனவே சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

சுய அறிவும் மனிதத் தன்மையும் இருந்தால் தான் நாம் வளரலாம். மனிதத் தன்மையை கடைப் பிடிக்க நாம் பயப்படுகிறோம். அதற்கு அசாதாரண அறிவு வேண்டும்; சுய அறிவு வேண்டும்.

எமக்குள்ளே அறிய முடியாத, அறியாத பல விடயங்கள் இருக்கின்றன. சுய பிம்பம் அல்லது பிரதிமை மூலம் அவற்றைத் தெளிந்து கொள்ள வேண்டும். வேண்டாத சுமைகளை நீக்கிவிட்டு இலகுவாகவும் சுலபமாகவும் வாழ்க்கைப் பயணம் தொடர வேண்டும். என்னை என்னால் பார்த்து தெளிவடைய [illegible] இருக்க பல தடைகள் உள்ளன. [illegible] ஆசானாகவும் இருந்து என்னைப் பார்த்தால் சுய அறிவு வளரும்; சுய பிம்பம் தோன்றும்.

### சுய அன்பு

சிலர் தன்னைப் பெரியவனாக நினைப்பதுண்டு, மற்றவர்கள் சொல்வதைக்கேட்டு தன்னைப் பெரிதாக நினைத்தால் அது தாழ்வுச் சிக்கலை உருவாக்கும். என்னைப் பற்றி ஆரோக்கியமான கருத்துக்களைப் புகுத்த வேண்டும். நல்லவனாக வல்லவனாக எண்ண வேண்டும். அதற்கேற்ப வாழ வேண்டும். மற்றவர்களை நேசிக்க முன் என்னை நேசிக்க வேண்டும்.

சுய அன்பு இருந்தால் தான் ஆளுமை வளரும். நான் என்னை அன்பு செய்தால் தான் மற்றவர்களை அன்பு செய்ய முடியும்.

இதுதான் நான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களை நாங்களாக ஏற்க வேண்டும் உடல் ரீதியாக உள ரீதியாக ஏற்கிறோமா? எனது அறிவுத்திறனை, தவறுகளை, அறியாமையை, உணர்வுகளை ஏற்க வேண்டும். இவற்றினால் ஏற்படும் தாக்கத்தை ஏற்க வேண்டும். அதற்கு வடிகால் அமைக்க வேண்டும்.

சுயபாராட்டலும் ஆளுமையை வளர்க்கும். எங்களை நாங்களே பாராட்ட வேண்டும். அறிவை, ஆற்றலைப் பாராட்டி மேலும் வளர்க்க வேண்டும். பிரச்சினைக்குரியதென்று எதுவுமே இல்லை. நாம் எப்போதும் எதிர்மறையானதைக் கூறிக் கொண்டிராமல் பாராட்டி உறுதிப்படுத்த வேண்டும்.

இவற்றை செய்வதன் மூலம் தான் எமது வாழ்க்கையைக் கொண்டாடலாம். இலக்கைத் தவறவிட்டு எங்கோ செல்லாமல் சரியான பாதையில், சரியான திசையில் செல்ல வேண்டும். சந்தோஷம் என்பது மன நிலையில் தான் உள்ளது. பலவீனம் உடலுக்கும் மனத்திற்கும் தான் இருப்பதை நிறைவாக எண்ணினால் மகிழ்வாக வாழலாம். இல்லாத ஒன்றிற்கு ஏங்க வேண்டாம். நிகழ்கால ஒவ்வொரு நிமிடத்தையும் உயிர்த்துடிப்புடனும், சந்தோசத்துடனும் வாழ வேண்டும். மகிழ்ச்சி என்பதும் என் மன நிறைவு என்பதும் என்னைப் பொறுத்ததே. சொர்க்கமும் நரகமும் என்னிடமே. வாழ்வை வளமுள்ளதாக்குவோம். பலமுள்ளதாக்குவோம். ★

தொகுப்பு
**மு.க சிவானந்தம்**


மகாத்மா (நெல்லியடி)
தெய்வேந்திரா (சாவகச்சேரி)
ஆகிய திரையரங்குகளில்

| | |
|---|---|
| தினசரி மாலை | 6-30 |
| சனி, ஞாயிறு காலை | 10-30 |
| | பிற்பகல் 2-30, 6-30 |

மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும்
K. A. அன்ரனியின்
★எல்லைக் கற்கள்★

[10077]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நோயாளரைப் பார்வையிட 2 ரூபா கட்டணம்!

### இங்கு அல்ல சென்னையில்!!

சென்னை, டிச. 26

அரச ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களை பார்வையிட வரும் பார்வையாளர்களிடம் இரண்டு ரூபா பணம் வசூலிக்கப்படும் என்று சென்னை பெரியாஸ்பத்திரி முதல்வர் டாக்டர் மேஜர் டி ராஜா அறிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களுக்கு குறிப்பிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் இரண்டு ரூபா அறவிடப்படும்.

இந்தக் கட்டண முறையால் வரும் வருமானம் ஏழை நோயாளிகளுக்கு உதவி செய்வதற்காக செலவிடப்படும். (ஒ-17)

## படையினர் தங்கியிருந்த

## 65 வீடுகள் மீண்டும் உரிமையாளர் வசம்

மன்னார், டிச. 26

1990 ஆம் ஆண்டிற்குப் பின் பேசாலை இரண்டாம் வட்டாரப் பகுதியில் சிறிது காலம் பாதுகாப்புப் படையினர் குடியிருந்த 65 வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் பல வீடுகள் சேதமடைந்த நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடுகளை திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபையின் முகாமையாளர் திரு. த. சிவநாதன் தெரிவித்துள்ளார், (ஒ-17)

## மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில்

## வீட்டுக் கூரை ஓடுகளை திருடிச்செல்லும் விஷமிகள்

சண்டிலிப்பாய், டிச. 26

இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளான பண்டத்தரிப்பு, சில்லாலை, பெரியவிளான் ஆகிய பகுதிகளில் வீடுகளின் கூரை ஓடுகளை திட்டமிட்டு திருடும் கோஷ்டி ஒன்று செயல்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இப் பகுதிகளில் உள்ள சில வீடுகளின் ஓடுகள் மாயமாக மறைந்து விட்டதாக வீடுகளை பார்த்து வரச் சென்ற இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விறகுக்காக வீட்டு வேலி கதியால்களும், சிறிய மரங்களும் களவாக வெட்டப்பட்டு வருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது (ஒ-135)

## தமிழரின் உரிமையுடைய தலைவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே ஆவர்

### ஈழவேந்தன் சந்திரிகாவுக்கு கடிதம்

சென்னை, டிச. 26

''தமிழர்களின் உரிமையுடைய தலைவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆவர். அரை நூற்றாண்டுக் காலம் இலங்கை அரசியல் அரங்கில் ஆதிக்கம் புரியும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை ஆமோதித்து தெளிவான தீர்ப்பை ஜனாதிபதித் தேர்தலில் வழங்கியுள்ள மக்களை நாம் பாராட்ட வேண்டும்''.

தமிழீழ விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. மா. க. ஈழவேந்தன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

செய்தி மேலும் கூறுவதாவது:

பல மொழிகள், பல மதங்கள், பல இனங்கள் உடைய ஸ்ரீலங்காவில் ஒரு சமஷ்டி அமைப்பை உருவாக்குவதே சரியான வழி என்று தங்கள் தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக 1920 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலேயே முன் வைத்தார்.

ஆனால் அவருக்கும் நாட்டுக்கும் துரதிருஷ்டமான முறையில் அரசியல் நிர்ப்பந்தங்களால் அவருடைய பார்வை மங்கியது. சிங்களபௌத்த தீவிரவாதிகளுக்கு அவர் பலியானார்.

உங்கள் தந்தையின் நிறைவேறாத கனவை அதாவது நாட்டின் அடிப்படை ஐக்கியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் தமிழர்களின் பிரத்தியேக இன அம்சத்தைப் பாதுகாக்க பயனுள்ள சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்குதல் என்பதை — நிறைவேற்றத் தங்களுக்குத் தற்போது ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்றும் அவ் வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (க)

## பிக்குகளுக்கு வாக்குரிமை பர்மாவில் கிடையாது

கொழும்பு, டிச. 26

மியான்மார் என்றழைக்கப்படும் பர்மிய நாட்டின் தேர்தல் வாக்காளர் இடாப்புகளில் பௌத்த பிக்குகள் மற்றும் பிக்குணிகளின் பெயர்கள் சேர்க்கப்படுவதில்லை. பௌத்த மதகுருமார்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டவே இந்த ஏற்பாடு.

கொழும்பு வந்துள்ள மியான்மார் பௌத்த சங்கராஜர் அபிதஜ மகாரட்ட குரு பதந்த சோபித மகாதேரர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''மியான்மாரில் உள்ள பௌத்த மதகுருமார் அரசியல் பதவிகளை வகிக்க முடியாது; தேர்தல்களில் அவர்கள் வாக்களிக்கவும் கூடாது. அரசியலில் நாம் சம்பந்தப்படுவது இல்லை'' என்றும் அவர் கூறினார். (எ)

## பிரிமா வேலை நிறுத்தம்:

## ஐ. தே. கட்சியின் எம். பி. கைதாகி பிணையில்!

பிரிமா பேக்கரி வேலை நிறுத்தம் தொடர்பாக பொலீஸாரால் கைது செய்யப்பட்ட ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பி. டாக்டர் ராஜித சேனரத்னாவை கொழும்பு மேலதிக நீதிவான் 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்து, மேல் விசாரணையை நாளைவரை ஒத்தி வைத்தார்.

பிரிமா பேக்கரி ஊழியர் வேலை நிறுத்தத்தின் போது நிறுவன நிர்வாகிகள் இருவர், கட்டடத்தின் மேல் மாடியில் பணயம் வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இந்த எம். பி கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இயங்கும் பிரிமா ஆலையின் கிளை நிறுவனமே பிரிமா பேக்கரி ஆகும். (எ-6)

## கசிப்பு காய்ச்சுவதற்கு உதவும்

## கோடாக் கலவை உற்பத்தி செய்த இருவருக்கு சிறை

### ரூ. 1லட்சத்து 20 ஆயிரம் அபராதம்

சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சுவதற்கு உபயோகப்படுத்தும்கோடாக் கலவையை உற்பத்தி செய்த குற்றத்திற்காக மானிப்பாய் வாசி ஒருவரும் ஈவினையைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும் தண்டனையாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதத்துடன் சிறைத்தண்டனையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்து சுன்னாகம்மாவட்ட நீதிமன்ற நீதியாளர் திரு. ஞா. அறிவொளி மேற்படி தண்டனையை இருவருக்கும் வழங்கினார்.

மானிப்பாய் செல்லமுத்து வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் முகுந்தன் என்பவர் 210 லீற்றர் கோடாகலவையை உற்பத்தி செய்தமைக்காக சங்கானை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

குற்றம் சுமத்தப்பட்டவர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட போது, அவருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதத்துடன் ஆறு மாத சிறைத் தண்டனையும் தீர்ப்பாக வழங்கப்பட்டது. அபராதப் பணம் செலுத்த தவறின் மேலும் நான்கு வருட சிறைத் தண்டனைக்கும் உத்தரவிடப்பட்டது.

மேலும், ஈவினை கொலணியைச் சேர்ந்த வைத்தி வள்ளியம்மை என்ற பெண்மணி 17 போத்தல் கோடா வைத்திருந்தமைக்காக சுன்னாகம் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இவரும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட போது நீதியாளர் இவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும் முப்பது நாள் சிறைத் தண்டனையும் விதித்தார். (ஒ-152)

## முன்னாள் சிப்பாய்க்கு 12 வருட சிறை!

கொழும்பு, டிச. 26

17 வயது யுவதிகள் இருவரை மானபங்கப் படுத்திய குற்றத்தை ஒப்புக்கொண்ட முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் 12 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது.

ரத்தோட்டை, மௌசாக்கல்லை என்ற இடத்தில் 1990 இல் இக் குற்றம் புரியப்பட்டது. 29 வயதான எதிரியை அரச செலவாக ஆயிரம் ரூபா செலுத்தும் படியும் உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத்தில் இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். [ஒ-எ]

## வயோதிபர் பலி

வயிற்றோட்டத்தினால் பீடிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த செல்லர் மயிலு (வயது 71) என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ-117)

## புதிய அரசமைப்பு அல்ல:

## இனப்பிரச்சினைத்தீர்வே முதலில் வரவேண்டும்

### சிங்கள சட்டத்தரணி கோரிக்கை

புதிய அரசமைப்பு ஒன்றை கொண்டு வருவதற்கு முன்பு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் புதிய அரசமைப்பு வந்த பின்பும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பின் புதிய அரசமைப்பும் செல்லாததாகிவிடும்.

சட்டத்தரணி நீல் டயஸ் நுவரெலியாவில் சட்டக்கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆகவே புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதில் அரசு தனது சக்தியை விரயம் செய்யாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முழுமூச்சுடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். [எ]




புரட்சித் தலைவர் மக்கள் திலகம்

# அமரர் டாக்டர் எம். ஜி. ஆர்.

# 7ஆம் ஆண்டு நினைவு நாள் விழா

★ காலம்: **26 - 12 - 1994 திங்கள்**

★ இடம்: மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்த வெளி அரங்கு
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

✶ தலைமை: திரு. பொன். மதிமுகராசா சமாதான நீதிவான் அவர்கள் (தலைவர், அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை)

★ நிகழ்ச்சி நிரல் ★

26 - 12 - 1994 திங்கள்

நினைவு தின விழா நிகழ்ச்சிகள்

*மாலை 4.00 மணி மங்கள விளக்கேற்றல்:*
திரு. ஈ. சரவணபவன் அவர்கள்
(நிர்வாக இயக்குநர், உதயன் பத்திரிகை)
வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சிர்மாறன்

*மலரஞ்சலி செலுத்துதல்:*
திரு. க. திருநாவுக்கரசு அவர்கள்
(அமைப்பாளர் சர்வோதயம், வட இலங்கை)
ப. சிவலோகநாதன்
(துணைத்தலைவர் இலங்கை இந்து இளைஞர் பேரவை)
திரு. ஆ. ஜீவரத்தினம் அவர்கள்
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி

*மலர் மாலை சூட்டுதல்:*
திரு. ச. அற்புததேவராசா

*தமிழ்த் தாய் வாழ்த்து:*
திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
(தலைவர் இளங் கலைஞர் மன்றம்)
திரு. நா. வீ. மு நவரத்தினம் அவர்கள்

*மங்கள இசை:*
திரு. எம். ரி. பாலகிருஷ்ணன்
(எம். ஜி. ஆர். பேரவை ஆஸ்தான கலைஞன்)

*தமிழ் மரபிசை:*
என். கே. பத்மநாதன் — என். கே. வீராச்சாமி
கே. ஆர். சுந்தரமூர்த்தி — கே. நித்தியானந்தன்
வி. கே. பஞ்சமூர்த்தி — கே. சிவகுமார்
எஸ். எஸ். சிதம்பரநாதன் — A. உதயசங்கர்
ஆர். கேதீஸ்வரன் — என். ஆர். எஸ். - இரவீந்திரன்

*வரவேற்புரை:*
திரு. செ. இலகுநாதன்
(பேரவை உறுப்பினர்)

*ஆசியுரை:*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்
அருட்திரு அ. ஜெயக்குமார்
(செயலாளர், தென்இந்திய திருச்சபை)

*முதன்மைப் பேருரை:*
திரு. செ, பத்மநாதன்
(திட்ட பணிப்பாளர்)
திருமதி ப. திலகநாயகம்
(மேலதிக அரச அதிபர்)

*நினைவுப் பேருரை:*
கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள்
(பிரதேசச் செயலாளர்)

*சிறப்புரை:*
திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)
திரு. கே. சி. வேலாயுதம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. சிவ மகாலிங்கம் B. A அவர்கள்
திரு. இரா. சுந்தரலிங்கம் B. A., B Sc. அவர்கள்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
திரு. சுந்தரம் டிவகலாலா B. A.
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்]
திருமதி க. சிவசிதம்பரம்
(மேலதிகஅரச அதிபர் பிரதேச செயலர், நல்லூர்)
திரு. அமு. அருணாசலம்
(அதிபர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி)

*நன்றியுரை:*
செல்வி ம. விஜயமதி

*விருது வழங்கல்:*
10 கலைஞர்களுக்கு எம். ஜி. ஆர். விருது

*கவியரங்கு:*
தமிழினத்துக்கு எம். ஜி. ஆர். ஓர் ஒளிவிளக்கு

*தலைமை:*
இயல், இசை வாருதி பிரம்மஸ்ரீ -
ந. வீரமணி ஐயர் அவர்கள்

கவிஞர் செ. பரமநாதன் — திரு. சோ. பத்மநாதன்
திரு. எஸ். பி. அருளானந்தம் — த. கோவிந்தசாமி
திரு. நாவண்ணன் — செல்வி. ம. கஸ்தூரிமதி

*புரட்சிப் பாடலில் புதுக் கவிதை:*
திரு. த. கோவிந்தசாமி

*பட்டிமன்றம்:*
புரட்சித் தலைவரின் திரைக் காவியங்களில்
தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது யார்
பாடல்களில்

*நடுவர்:*
புலவர் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள்
(மாவட்ட நீதிபதி, மன்னார்)

கவிஞர் பட்டுக்கோட்டை — கவிஞர் கண்ணதாசன்
திரு. கனக நாகேஸ்வரன் — திரு. பொன். கணேசமூர்த்தி
திரு. த. சிவகுமாரன் — திரு. இரா. செல்வவடிவேல்
திரு. செ. சத்தியமூர்த்தி — திரு. எஸ். கணேசலிங்கம்
திரு. பசு ஸ்ரீபதி — திரு. க. கணேசலிங்கம்

*கவிஞர் வாலி*
திரு. அ. குமாரவேல் — திரு. எம். எஸ். தயாளன்
திரு. ஆறு. திருமுருகன் — திரு. எம். எஸ் முத்துலிங்கம்

*கரகாட்டம்:*
செல்வன் சி இராஜபேட் குழுவினர்
செல்வன் இ. லெவன்

*நாடகம்:* ஸ்ரீதேவி எஸ். எஸ். சர்மா வில்லிசை கலைஞர்
எம். தைரியநாதன் இணைந்து வழங்கும்
✶ போர்க் களக் காண்டம் ✶

*நாடகம்:* கோண்டாவில் கற்பகா குழுவினர் வழங்கும்
சிவநாதனின் நெறியாள்கையில்
கே. எஸ். தர்மராசாவின்

★ தூண்கள் ★

நடனம்: இலங்கை வேந்தர் குழுவினர்
மெல்லிசை: அருணா மெல்லிசைக் குழுவினர்

இவ் விழா சிறக்க வாழ்த்துவதுடன் அமரர் எம். ஜி. ஆர். அவர்களது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

# ஸ்ரீ நதியா நகை மாடம்

இல. 2, அருச்சுனா வீதி,
(ஸ்ரான்லி)
யாழ்ப்பாணம்.

(சி/10099)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல பாடசாலை புத்தகங்களும் குறித்த விலையில் இருந்து 5% கழிவுடன் விற்பனையாகின்றன. பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நியாய விலையில் விற்பனையாகின்றன. ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி, 635, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8063)

1995ஆம் ஆண்டுக்குரிய நாட்குறிப்பேடுகள் (டயறி) மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. தொகைக்கு எடுப்பின் கழிவு வழங்கப்படும். ரஞ்சித் இல. 16 (44), மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (34306)

இனவிருத்திக்கு உகந்த சுத்தமான ஜமுனாபாறி ஐந்து மாத கடாக்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. இல.3, சீனியர் லேன் (தட்டா தெரு சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். [34325]

### விற்பனையாகிறது

சிவம் கலண்டர்கள் பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறிவகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 165, மின்சார நிலையம். தலைமையகம்: மக்மிலன், யாழ்ப்பாணம். (சி-9929)

### அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம், அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

### தவறிவிட்டது

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் 23-12-94 வெள்ளிக்கிழமை 687903382V இலக்கத்தையுடைய தே. அ. அட்டை, சாவிக்கொத்து மற்றும் சில பொருள்கள் அடங்கிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் க. கதிரவேல், சரஸ்வதி சனசமூக நிலைய அருகில், உரும்பிராய் வடக்கு என்னும் விலாசத்தில் அல்லது மேற்குறிப்பிட்ட சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [8153]

### காணவில்லை

கறவைப்பசு நெற்றிச்சுட்டியும் நடுவயிறு வெள்ளையும், நீண்டவாலும் காதில்வெட்டும் கொம்புகள் பிறைவடிவானதும் சிவப்பு நிறமுடையதாகும். 2 வயதுடைய இதன் கன்னிநாகு மாநிறமானது 2 அங்குல கொம்புகளையுடையது. இவ்விரு பசுக்கள் 141, மருத்துவமனை வளவிலிருந்து மேய்ந்து தெருவால் வந்துகொண்டிருந்தபோது 21-12-94 திட்டமிட்டு கடத்தப்பட்டுள்ளது. இனங்காண்பவர்கள் வரதராசன், 12, 1ஆம் குறுக்குத் தெரு. குருநகர், யாழ்ப்பாணம். தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [8154]

## விக்னா

கல்வி நிறுவனம்
**94** பரீட்சை
எடுத்தவர்களுக்கான
மீட்டல்

தமிழ்: திரு. குழந்தை
திங்கள், வெள்ளி
மாலை (4.30 — 6.00)

ஆரம்பம்:
**26 - 12 - 94**

புவியியல்—
திரு. குணராஜா
சனி, ஞாயிறு
மாலை (3-00 — 5-00)
ஆரம்பம்:
**31 - 12 - 94**

(சி-54)

### பாலர் ஆசிரியை

கட்டுடையில் இயங்கிவரும் கோபாலன் சிறுவர் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியை ஒருவர் தேவை. 31-12-94 காலை 9-30 மணிக்கு கட்டுடை திருமதி இ. துரைராசா, திருமகால், கட்டுடை இல்லத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு ஆவணங்களுடன் தோற்றவும். (34353)

### நத்தார் நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை, டிச. 26

வட்டுக்கோட்டை ஆதீன ஆலய பிள்ளைகளின் நத்தார் மரவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் ஆதீன ஆலய இளைஞர் நிகழ்ச்சி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் இடம்பெறும். (க-161)

அன்புடன் அழைக்கிறோம்

**யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்**

நடத்தும்

## ஒளி விழா

**27 - 12 - 1994**

மாலை 3மணிக்கு (தலைமைச் செயலகம்)

*பிரதம விருந்தினர்:*
போராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார்

**சிறப்பு விருந்தினர்கள்:**

★ திரு. சி. இளம்பரிதி
பொறுப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறை

★ திரு. க. பரணி
பொறுப்பாளர், கூட்டுறவுப் பகுதி. தமிழீழ நிர்வாக சேவை

★ கலாநிதி க. குணராசா
பிரதேச செயலர், யாழ்ப்பாணம்

★ திரு. சொலமன், சூ. சிறில்
தலைவர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ சங்கம்

**ஒளி ஏற்றல்:**

★ திரு. பொ. செந்தமிழன்
பொறுப்பாளர், யாழ்ப்பாண வட்டவை

★ திரு. ஆர். அருளானந்தம்
பிராந்திய முகாமையாளர்-மக்கள் வங்கி

★ திரு. சா. செல்வரட்ணம்
உபதலைவர், மாவட்ட கூட்டுறவுச் சபை

★ திரு. ச. த. கணநாதன்
உபதலைவர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்

### நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| வானவர் கீதம் | — சங்க பணியாளர் பாடகர் குழாம் |
| வரவேற்றல் | — திருமதி புஸ்பம் நவரட்ணம் செயலர் |
| வரவேற்பு நடனம் | — பணியாளர்களின் குழந்தைகள் |
| இறை வார்த்தை | — திருமதி வுளோறன்ஸ்-ஸ்ரீஸ்கந்தராஜா |
| முதன்மை உரை | — திரு. ஞா. ஞானசிங்கம்-பணிப்பாளர் (தலைவர் - விழாக்குழு) |
| மானிட கீதம் | — சங்க பணியாளர் பாடகர் குழாம் |

### சிறப்பு நிகழ்ச்சிகள்

✶ பணியாளர்களின் இன்னிசை
✶ நாடகம் இடம் பெறும்

எமது அழைப்பை ஏற்று விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கிறிஸ்துவின் சமாதானத்தை பகிர்ந்து கொள்ளுவோமாக.

கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகுக.


— நன்றி —

சி. பவானந்தன்,
விழாக்குழுச் செயலர்.

[சி-10093]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 10 — 1912



மறைவு: 26 — 12 — 1993

அமரர்
**வைத்திலிங்கம் அரசன்** (தாவடி)
(இளைப்பாறிய மாவட்ட பாடசாலை பரிசோதகர்)

திதி: 14 — 1 — 1995

ஆண்டு ஒன்று போயும் உங்கள் உயிர்
மீண்டும் வராதோவெனத் -தினம்
ஏங்கி நிற்கும் எனதுயிரை
தாங்கி உன்பதம் சேருமையா!

—அன்பு மனைவி.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கும்;

— அரசன் குடும்பத்தினர்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி.

(343..)

## பிறந்த நாள் வாழ்த்து

**திரு. சு. இரத்தினராசா**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்)

இன்று தமது 51 ஆவது பிறந்தநாளை கொண்டாடும் திரு. சு. இரத்தினராசா அவர்கள் சகல செல்வங்களும் பெற்று, நீண்டகாலம் சுகமாக வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

கோட்டக் கல்வி ஊழியர்கள்
உடுவில்.

(சி-61)

இன்று
**(26-12-94)**
பிறந்த பாலன் கிறிஸ்து உங்களை
**சந்திக்க வருகின்றார்**
கிறிஸ்து பிறப்பின்

## ★ ஒளி விழா ★

புனித யுவானியார் ஆலய முன்றிலில்
(St. John's the Baptist Church Chundikuli)
சரியாக 5மணிக்கு
*சிறுவர் சிறுமியரின் கண்கவர் நடனங்கள், கிறிஸ்மஸ் செய்தி, வில்லிசை, கரோல், இன்னிசை கீதங்கள்*

**அனைவரும் வருக!**
கிறிஸ்துவின் பிறப்பு செய்தியை உணர்ந்து மகிழுங்கள்

விளம்பர அன்பளிப்பு:
**ரெட்ணா கபே**
820, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
[34355]

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சரஸ்வதி அம்மா கிருஷ்ணன்**

திதி: 26 — 12 — 1994

ஆண்டுகள் ஐந்து சென்றும், என் நெஞ்சை விட்டகலா என் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.


—ஐ. கிருஷ்ணன்.

24, இந்திராபுரம்,
முகமாலை.

(சி-10098)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1° — 08 — 1912



மறைவு: 06 — 01 — 1994

**அமரர் தாமு தம்பையா**
(அளவெட்டி வடக்கு)

திதி. 26-12-1994

அன்பால், அறிவால், பண்பால் எங்களை எல்லாம் வழிநடத்தி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு இறைவன் பாதம் தொழுதிடச் சென்று ஓராண்டு சென்றாலும் மாறாது எம்சோகம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சி. ஜெயநாதன்,
"இலிவாசா",
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[34326]

எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை
21. கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஒளி விழா

**26 - 12 - 1994** மாலை **6-00** மணிக்கு
அருட்திரு. மோர்வின் குணச்செல்வம்
அவர்கள் தேவசெய்தி வழங்குவார்.

யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

—சபை போதகரும், விசுவாசிகளும்.

(34347)

1995ஆம் ஆண்டு

## பொங்கல் விழா

கோட்டைக்காடு, மல்லாகம்
சைவ வாலிபர் சங்க சனசமூக நிலைய
நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவை
முன்னிட்டு
**அமரர் குழந்தைவேல்**
ஞாபகார்த்த
**நாவன்மை, பண்ணிசை**

### போட்டிகள்

கீழ்ப் பிரிவு ஆண்டு 3—5 வரை
இன்பப் பொங்கல் நேரம் 5 நிமிடங்கள்

மத்திய பிரிவு ஆண்டு 6—8 வரை
தமிழர் வாழ்வின் பொங்கல் நேரம் 7நிமிடங்கள்

மேற் பிரிவு ஆண்டு 9—12 வரை
பொங்கலின் மகத்துவம் நேரம் 9 நிமிடங்கள்
(பண்ணிசைப் போட்டியில் சகல பிரிவினரும் விரும்பிய ஒரு பண்பாடலாம்)

மேற்படி விதிமுறைக்கு அமைய போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 05-01-1995இற்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

போட்டிகள் நிலைய அரங்கில் நடைபெறும்.

நாவன்மை — 1995-01-13 முற்பகல் 9மணி
பண்ணிசை — 1995-01-14 முற்பகல் 9மணி

சைவ வாலிபர் சங்க
சனசமூக நிலையம்

(34362)

## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடம்

**தட்டெழுத்து, சுருக்கெழுத்து – தமிழ்**

**தகைமை:**
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து உட்பட 06 பாடங்களில் சித்தி.

**வயது:**
**18** தொடக்கம் **30** வரை ஆண்/பெண் இருபாலாரும்

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 28-12-94 காலை 9-00 மணிக்கு பழைய பூங்கா நடுவப் பணியகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை.

(சி-10096)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி சின்னம்மா தெய்வர்**
(ஏழாலை)

தோற்றம்: 28 — 03 — 1896
மறைவு: 06 — 01 — 1994

திதி: 26 — 12 — 1994

ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்;
குடும்ப உறுப்பினர்கள்,
உற்றார், உறவினர்கள்.

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(34314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கிழக்கில் ராணுவ ஆட்சி?

கிறிஸ்தவப் பெருமக்களுக்கு இது பண்டிகைக்காலம். நேற்று நத்தார். எதிர்வரும் ஞாயிறு புதுவருடப் பிறப்பு. இந்த இடைப்பட்ட ஒரு வாரத்தையும் கிறிஸ்தவ மக்கள் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். நத்தார், புதுவருடப்பிறப்பு நாள்களை மங்களகரமாக வரவேற்கும் பொருட்டு வெடிகொளுத்தி மகிழ்வது சாதாரணமானது. ஆனால்..

சிவில் நிர்வாகமும், அமைதியும் நிலவுவதாக அரசாங்கத் தரப்பினரால், வர்ணிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பில் மக்கள் வெடி கொளுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது! இந்தத் தடையை விதித்திருப்பவர்கள், கிழக்கு முழுவதும் அரசாங்கத்தின் — தமது கட்டுப்பாட்டில் உள்ளதாக இடைவிடாது "டாமாரம்" அடிக்கும் படையினர்!

மக்கள் வெடி கொளுத்துவதால், துப்பாக்கி வெடிச் சத்தத்துக்கும், உண்மையான வெடிச் சத்தத்துக்கும் இடையில் வித்தியாசம் காண முடியவில்லை. வெடி கொளுத்தத் தடை விதிக்கப்பட்டதற்குக் கூறப்பட்டிருக்கும் காரணம் இதுவே.

வெடிச் சத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விடுவர் என்ற அச்சத்தின் நிமித்தமே இந்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதே உண்மையான விளக்கம்!

மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய். விடுதலைப் புலிகள் தங்களை எப்போதும் தாக்கலாம் என்று சதா அச்சமடைந்திருக்கும் படையினருக்கு வெடிச் சத்தம் எமனாகத் தோற்றமளிப்பதில் வியப்பில்லைத்தான்! மனதிற்குள் புலிகள் குறித்து இந்தளவுக்கு பயம் அதிகமாக இருந்தாலும், வெளியே காட்டிக் கொள்வதோ வேறு!

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டோம்; அந்தப் பிராந்தியம் முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்று வெளியே மார்பு தட்டும் படையினர், வெடிச் சத்தத்துக்கு கிலி கொள்வது வெட்கக் கேடானதாகும்.

அது ஒரு புறமிருக்க, கிழக்கில் படையினரின் ஆதிக்கம், அதிகாரத்தனம் எந்தளவுக்கு மேலோங்கி நிற்கிறது என்பதற்கு, வெடி கொளுத்துவதற்கான இந்தத் தடை ஒரு நல்ல உதாரணம்.

ஜனநாயகம் என்பது மக்களுக்காக அரசே அன்றி; அரசுக்காக மக்கள் அல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக் கோட்பாடு. ஆனால் கிழக்கில் அரசின் பாதுகாப்புப் படையினருக்காகவே மக்கள், மக்களுக்காக பாதுகாப்புப் படையினர் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளதையே வெடி கொளுத்தும் தடை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இங்கே மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களின் பண்டிகை கொண்டாடும் உரிமை எதேச்சாதிகாரமாகப் பறிக்கப்பட்டுள்ளது. தட்டிக் கேட்க ஆள் இல்லை என்றால் தம்பி தண்டப் பிரசண்டம் செய்யாமல் விடுவானா?

பாதுகாப்புப் படையினர் எனப்படுவோர் மக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் பாதுகாப்புக்கான ஒரு கருவியினர். மக்களது உயிர், உடைமைகளுக்குச் சேதம் உண்டாகாமல் காப்பது அவர்களின் கடமை. அதன் பொருட்டு படையினர் தமது பாதுகாப்பையும் துச்சமாக மதித்துப் பணிபுரிய வேண்டியவர்கள்.

ஆனால், மட்டக்களப்பில், பாதுகாப்புப் படையினர் தங்களைப் பாதுகாப்பதற்காக மக்களின் உரிமைகளை பறித்துள்ளார்கள். மக்கள் தமிழர்கள் என்பதால் எல்லாமே தலைகீழாக நடக்கிறது!

அரசாங்க நிர்வாகம், சிவில் நிர்வாகம் என்ற பெயரில் படையினர் அதிகாரம் செலுத்த அனுமதி அளித்தால் நிலைமை இப்படித்தான் மோசமாகும். மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் இப்போது நடப்பது இராணுவ ஆட்சியே என்பதற்கு இதனை விட வேறு என்ன உதாரணம் தேவை?

# அதிகாரப் பகிர்வு முறையை உடன் மாற்றி அமைக்க வேண்டும்

### கருத்தரங்கில் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, டிச. 26

தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் முறையில் பல குறைபாடுகள் உள்ளன. அவை உடனடியாக மாற்றியமைக்கப்படவேண்டும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அரசியல் பண்பாடும் அரசமைப்பு விவகாரமும் என்ற தலைப்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றிப் பேசுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஜேர்மன் தேர்தல் நடைமுறையை மாதிரியாகக் கொண்டு விரிவான அதிகாரப் பகிர்வு பற்றி அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றம் தெரிவுக்குழு பரிசீலனைசெய்ய வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் நடத்தும் கலந்துரையாடல்கள் மற்றும் பூரணமான அரசியல் ஆய்வுகளின் பின்பே இப்படியாக அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

எல்லாத் தேர்தல் நடைமுறைகளிலும் குறைபாடுகள் உண்டு. தற்போது உள்ள தேர்தல் நடைமுறைகளிலும் பார்க்க ஜேர்மன் முறையில் முன்னேற்றகரமான பல அம்சங்கள் உண்டு ஜேர்மன் தேர்தல் முறையில் வாக்காளர் திருப்தி உயர்ந்த அளவு காணப்படுகிறது. ஜேர்மன் முறை விசேடமாக கலாசார, பொருளாதார, சமூக வேறுபாடுகளைக் கவனத்துக் கெடுத்துக்கொண்டுள்ளது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு உறுதியான, கணிசமான அதிகாரப் பகிர்வு தேவையாகிறது. இது தொடர்பாக மங்கள முனசிங்காவின் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை, 1978ஆம் ஆண்டு அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஆகியன நுணுக்கமாக பரிசீலனை செய்யப்படும். இதன் முடிவுகள் இனப்பிரச்சினைக்கு விரிவான அதிகாரப் பகிர்வுமூலம் தீர்வு காண அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பேசுகையில்— மக்களின் வாழ்க்கையைக் குழப்பாத விதத்தில் கவனமான முறையில் அதிகாரப் பகிர்வு தேவைப்படுகிறது என்று தெரிவித்தார். [எ]

அரச எம். பி தலைமையில்

# அரசியல் அதிகார சபைகள் மாவட்ட ரீதியில் அமைக்கப்படும்

கொழும்பு, டிச. 26

நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் மாவட்ட அதிகாரசபைகளை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சபைகளின் உறுப்பினர்களாக அரச மற்றும் எதிர்க்கட்சி எம். பிக்களே இருப்பர்.

ஒவ்வொரு அரசியல் அதிகாரசபையின் தலைவராக அரச எம். பி. ஒருவரே நியமிக்கப்படுவார். அச் சபையின் செயலாளராக மாவட்ட அரச அதிபர் பணிபுரிவார்.

அதிக மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு கொண்ட மாவட்டங்களுக்கு இரண்டு அரசியல் அதிகாரசபைகள் நிறுவப்படும். கொழும்பு, குருணாகல, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே இரண்டு அரசியல் அதிகாரசபைகள் இருக்கும்.

ஒரு மாவட்டத்தில் இரண்டு அரசியல் அதிகாரசபைகள் நிறுவப்படும் பட்சத்தில் அம் மாவட்டத்தின் அரச அதிபரே இரண்டுக்கும் செயலாளராகப் பணிபுரிவார்.

இச் சபைகளில் இடம் பெறும் எம். பிக்கள் அந்தந்த மாவட்டத்தின் பொது வளர்ச்சிப் பணிகள் மற்றும் தேவைகள் பற்றி ஆராய்ந்து, அவற்றை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்ட அரசியல் அதிகாரசபைகளின் தலைவர்கள் யார் என்பதை அரசாங்கம் அடுத்த சில தினங்களில் அறிவிக்கும் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

1970-77 காலத்தில் ஆட்சி நடத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு மாவட்ட அரசியல் அதிகாரி முறையை அமுல் நடத்தியது தெரிந்ததே. அரச எம். பிக்களே அப்போது மாவட்ட அரசியல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். (எ)

அரசைப் பலவீனப்படுத்தும்

# எதிரணியின் போக்குக் குறித்து சந்திரிகா மந்திராலோசனை

கொழும்பு, டிச. 26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அது ஓராண்டை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பலவீனப்படுத்தும் முயற்சியில் எதிரணியைச் சேர்ந்த சக்திகள் சில முயற்சித்து வருவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது ஆலோசகர்களையும் சிரேஷ்ட அமைச்சர்களையும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கடந்த சில தினங்களாக தமது ஆலோசகர்களுடனும் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

சமாதானப் பேச்சு, தொழிலாளர் அமைதியின்மை, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியன குறித்து அப்பேச்சுகளின் போது ஆராயப்பட்டன.

அரசின் உண்மைத் தன்மை குறித்து மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுவருவதாகவும் அவர் அப்போது தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் தாம் இழந்துபோன நம்பிக்கையை மீண்டும் பெறமுடியாத நிலையில் உள்ள எதிரணி அரசின் கொள்கைகளை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (எ)

# தென்பகுதி இளைஞருக்கு வேலை வழங்க அரசுதிட்டம்

தென் மாகாணத்தில் முதல் கட்டத்திலேயே பத்தாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் ஒன்றை உடனடியாக அமுல் நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவெல என்னும் இடத்தில் 250 ஏக்கரில் கைத்தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க இலங்கை முதலீட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

1989—90 காலப் பகுதியில் தென் இலங்கையில் தீவிரவாதச் செயல்கள் இடம் பெற்றபோது தென்மாகாணமே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது தென்மாகாணத்தில் உள்ள இளைஞர்கள் மத்தியில் நிலவிய கடுமையான வேலையில்லாத் திண்டாட்டமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## இலவச மூக்குகண்ணாடி

வட்டுக்கோட்டை லயன் கழகத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளனர்.

மூக்குக்கண்ணாடிகளை வைத்தியர்களின் சிபார்சுக் கடிதத்துடன் லயன் கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரியவருகின்றது. (க-161)

## புலிகளின் குரல் வானொலியில்

26 — 12 — 1994
திங்கள் இரவு
★ 8-01 — துளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40—தரிசனம் - கலைமணி சு. வடிவேல் அவர்களுடான செவ்வி
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

27 — 12 — 1994
செவ்வாய் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-10 — தாயகப் பாடல்கள்
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## பழைய இடத்தில் பரிசோதனை நிலையம்

இதுவரை குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த வைத்திய சாலையில் இயங்கி வந்த மலேரியாத் தரிப்பு இரத்தப் பரிசோதனை நிலையம் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமான நோயாளர்கள் யாழ். மத்திய மருந்தகத்திற்கு மாற்றப்பட்டுள்ள மேற்படி நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்படுகிறது. (க-51)

# யாழ். பாடசாலை அபிவிருத்திக்கு பத்தாண்டு புனரமைப்புத் திட்டம்

வலிகாமம் தெற்கு, டிச.26

எதிர்வரும் பத்து ஆண்டு காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளை அபிவிருத்தித் திட்ட அடிப்படையில் புனரமைத்து அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் எடுத்து வருகின்றது.

பாடசாலைகளுக்குத் தேவையான கட்டட வசதிகள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைத்துக்கொள்ளவும்—

அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான திட்டங்களை பாடசாலைகளின் அமைப்புப் படங்களுடன் தருமாறு கல்வித் திணைக்களம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினாலும், வெளிநாட்டு உதவி நிறுவனங்களினாலும் பாடசாலைகள் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் போது மேற்படி அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களை ஆக்குவதற்கு தேவையான மதிப்பீட்டு பெறுமதி விவரங்களையும் கல்வித்திணைக்களம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க- 152)

## அலுவலகங்கள் மூடப்படுகின்றன

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பல அரச அலுவலகங்களுக்கு மூடுவிழா நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பில் இயங்கி வந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி கமநல சேவையாளர் அலுவலகம் இம் மாதம் 15 ஆம் திகதி மூடப்பட்டதாக சொல்லப்படுகிறது. (உ-3)

# இடம் பெயர்ந்த மக்களும் அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும்

### யாழ். அரச அதிபர் பேச்சு

"யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் நிவாரணத்தில் தங்கியுள்ளவர்களாக இருப்பதை அனுமதிக்கக் கூடாது. அவர்களையும் அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடச் செய்ய வேண்டும்"

இப்படிக் கூறினார் யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம்.

யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தி பற்றி ஆராய யாழ். செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

"யாழ். மாவட்டத்தில் இருவகை மக்கள் வாழ்கின்றார். ஒரு பகுதியினர் இடம் பெயர்ந்தவர்கள் [illegible] கள் இடம் பெயராதவர்கள்.

அபிவிருத்தி திட்டங்கள் வகுக்கும் போது பொதுவான திட்டங்களை வகுக்க முடியாதுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கி அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டியுள்ளது மற்றவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அபிவிருத்தி திட்டங்கள் [illegible] இந்த நிலை மாற்றப்பட [illegible]" கூறினார். (க-3)

## திருடர் தொல்லை

நாவற்குழி, டிச. 26

கைதடி - நாவற்குழி, மறவன்புலோப் பகுதிகளில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் பல வீடுகளிலிருந்தும் இரவு நேரத்தில் கோழிகளும் ஆடு மாடுகளும் திருடப்பட்டுள்ளன.

திருடர்கள் பல வீடுகளில் தென்னை மரங்களில் ஏறித் தேங்காய்களையும் பறித்துச் செல்கின்றனர். (க)

# தர்மப்பணம் வழங்குவதில் அமுலுக்கு வரும் புதியவிதி

யாழ்ப்பாணம், டிச 26

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர் வர முடியாதவிடத்து, அப்பணத்தைப் பெறுவதற்காக தனியே கிராமசேவையாளரினால் வழங்கப்படும் கடிதத்துடன் வரும் அவரின் பிரதிநிதியிடம் பணத்தை வழங்கக் கூடாது என்று தபாலதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

உபதபாலதிபர்களுக்காக கடந்த சனிக்கிழமை யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கில் கருத்துரையாற்றிய வடமாகாண தபால் திணைக்களத்தின் நுண்ணாய்வுப் பரிசோதகர் திரு எஸ். தர்மராஜன் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

தர்மப் பணம் பெறுபவர் தான் வர முடியாமைக்கான காரணத்தையும் பணம் எடுப்பதற்கு தான் சிபார்சு செய்த பிரதிநிதியின் பெயரையும் எழுதி கையொப்பமிட்டு, கிழே கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிநிதியின் மாதிரி ஒப்பந்ததை நஇட்டு, அது பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட கடிதங்களுக்கே பணத்தை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

வட மேல்மாகாண சபை

# ஐ. ஐ. தே. மு. அமைச்சர் பதவி நீக்கப்படுவார்

கொழும்பு, டிச. 26

வடமேல் மாகாண சபையின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான சுனில் ரஞ்சன் ஜயக்கொடியை அப்பதவியில் இருந்து அகற்றி விட, முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இது தொடர்பாக அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அறிவித்துள்ளார்.

எனினும் அவரை மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க முடியாத நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது காரணம் அவர் காமினி திஸாநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினராக இருந்து வருவதேயாகும்.

தமது கடமையை ஜயக்கொடி சரிவரச செய்யவில்லை என்று குற்றஞ் சாட்டியே அவர் பதவி நீக்கஞ் செய்யப்படவிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

# கூரேயை எம். பியாக்கும் முயற்சியில் பின்னடைவு

கொழும்பு, டிச. 26

மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரலாம் என்று எதிர்பார்க்கப்படும் சிறிசேன கூரேயை தேசியப் பட்டியல் எம். பியாக்க ஐ. தே க. தலைமைப் பீடம் எடுத்த முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. கூரேக்கு இடமளிப்பதற்காக ஐ.தே.க தேசியப் பட்டியலில் உள்ள பெண் எம். பி. ஒருவரை பதவி விலகும்படி ஐ. தே. க. தலைமைப்பீடம் கேட்டிருந்தது.

அதற்கு அந்தப் பெண் எம். பி. மறுத்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த அவர் முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் நெருங்கிய உறவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விஜேதுங்கா ஜனாதிபதியாக இருந்த போதுதான் அவருடன் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக திரு. கூரே கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்தார் என்பது தெரிந்ததே.

இதேவேளை, திரு. கூரேயை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்து அவருக்கு முக்கிய பணி ஒன்றை ஒப்படைக்கும் முயற்சியில் கட்சித் தலைமைப் பீடம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் —

திரு. கூரேயுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

கொழும்பு பல்கலைக்கழக

# மாணவருக்கு விடுதிகளை மக்கள் வங்கி வழங்கும்

கொழும்பு டிச. 26

கொழும்புப் பலகலைக்கழக மாணவர்களுக்கு விடுதி வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு மக்கள் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

80 லட்சம்ருபா செலவில் விடுதிக் கட்டடங்களை அமைத்துக் கொடுக்க மக்கள் வங்கியின் தலைவர் டாக்டர் காமினி பெர்னாண்டோ சம்மதம் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பதிரான வெளியிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவரின் விடுதிப் பிரச்சினை சந்திரிகா அரசுக்கு பெரிய தலையிடியாக அமைந்துள்ளது தெரிந்ததே. (எ-6)

வியாங்கொட கொள்ளை:

# பொலீஸ் அதிகாரிகளுடன் சந்தேகநபருக்கு தொடர்பு

கொழும்பு. டிச 26

வியாங்கொடை வெபரெக்ஸ் ஆடைத் தொழிற்சாலைக்குரிய 80லட்சம் ருபா சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதான பிரதான சந்தேக நபருக்கும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் சிலருக்கும் இடையே தொடர்பு இருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கம்பஹா பொலீஸ் அதிபர் காமினி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இச் சந்தேக நபர் தாம் சமூகத்தில் முக்கிய அந்தஸ்து பெற்ற வர்த்தகர் என்று காட்டிக் கொண்டு பொலீஸாருடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் —

தாம் புரிந்த கொள்ளைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவே சந்தேக நபர் இப்படி நடந்து கொண்டுள்ளார் என்றும தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# ஆஸ்பத்திரி ஊழியர் பணி குறித்து அமைச்சர் பௌசி

கொழும்பு. டிச 26

அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும ஊழியர்கள் தங்களின் தரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை மட்டுமே மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுத்து வருவதாக சுகாதார அமைச்சர் ஜனாப். ஏ.எச்.எம் பௌஸி தெரிவித்திருக்கிறார்.

இப்போது சில இடங்களில் சில தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களுக்கு ஒதுக்கப்படாத கடமைகளை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றும் —

இதனை நிறுத்தவே அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

**நீர் இன்றேல் ஏர் இல்லை**
**ஏர் இன்றேல் சோறில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலம் பாராட்டு விழா

சண்டிலிப்பாய், டிச, 26

யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக நீண்டகாலம் கடமையாற்றி எதிர்வரும் ஜனவரியில் திருகோணமலையிலுள்ள வடக்குகிழக்குமாகாண கல்வி அமைச்சுக்கு பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. சு. டிவகலலாலாவுக்கு வலி. மேற்கு பிரதேச சபையின்விசேடஆணையாளரும்,பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து அளிக்கும் சேவை நலம் பாராட்டு வைபவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் சுழிபுரம் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி காளிமுத்து ஆச்சாரி முத்தாச்சி

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திருமதி காளிமுத்து ஆச்சாரி முத்தாச்சி நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காளிமுத்து ஆச்சாரியின் அன்பு மனைவியும், மாரிமுத்து ஆச்சாரி, இராஜ்கோபால் ஆச்சாரி, காலஞ்சென்ற இரத்தினவடிவேல் ஆச்சாரி, மனோன்மணி, பரமேஸ்வரி, ஜானகி, மகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-12-94) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

கா. மாரிமுத்து ஆச்சாரி

(34366)

### திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா [சின்னவான்]

கந்தர்மடம், குமாரசாமி வீதி இரண்டாம் இலக்க இல்லத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்மா 22-12-94 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், நல்லைநாதன், தில்லைநாதன், கனகாம்பிகை (ஆஸ்திரேலியா), ஹம்சினி (லண்டன்), பரமேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும். சிவநேசமலர், மகேஸ்வரதேவி, இரத்தினவேல் (ஆஸ்திரேலியா), இரவீந்திரன் (லண்டன்), திலகநாதன் ஆகியோரின் அன்புமாமியாரும். நாகதீபன், இலட்சுமணன், வதனா, ரூபன், கவிதா, சுமந்திரன் (ஆஸ்திரேலியா), உஷா, உமையாள், கார்த்திகன் (லண்டன்), ஹனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-12-94 வியாழக்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ. திலகநாதன் (மருமகன்)

63, (2), குமாரசாமி வீதி,
கந்தர்மடம,
யாழ்ப்பாணம்.

(34368)

### திருமதி கணேசன் தியாகலஷ்மி

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கணேசன் தியாகலஷ்மி நேற்று (25-12-94) காலமானார்.

இவர் நாகேந்திராவின் (சின்ன மாமா – ராஜா ஸ்ரோர்ஸ்) அருமைத்தாயாரும், பாக்கியத்தின் அருமைச் சகோதரியும், சரோஜினியின் அருமை மாமியாரும், சோமசுந்தரம், மார்க்கண்டு, யோகம்மா, சரஸ்வதி, சண்முகநாதன், அருந்தவமணி (உரும்பராய்) ஆகியோரின் மைத்துனியும், ரவித்தா, லக்ஷன், கஜலக்ஷி ஆகியோரின் பேர்த்தியும், லோஜினியின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (26-12-94) நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்,

க. நாகேந்திரா (மகன்)

'லக்ஷ்மி வாசா'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(34370)

### திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் நாகலிங்கத்தின் மனைவியும், சோ. சந்தையா, சோ. கணேசலிங்கம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர்), திருமதி அருணாசலம் சிவபாக்கியம், காலஞ்சென்ற திருமதி யோகராசா பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி புஷ்பா கணேசலிங்கம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கோட்டம்) அவர்களின் மைத்துனியும், திருமதி நற்குணம் கனகம்மா (ஆசிரியை, அ. த. வித்தியாலயம் அல்லாரை), திருமதி இராமச்சந்திரன் மங்களேஸ்வரி (இலிகிதர் ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி), நா பரமசிவம் (கிராம உத்தியோகத்தர், மீசாலைகிழக்கு), திருமதி நாகேந்திரராசா புவனேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் ம. வித்தியாலயம், மீசாலை), நா. ஆனந்தசிவம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடத்திணைக்களம், உரிமையாளர் சிவம் படமாடம், சாவகச்சேரி), நா. நடராசசிவம் (மீசாலை), திருமதி சிவலிங்கம் இராஜேஸ்வரி (உதவி வைத்திய அதிகாரி அரசினர் மருத்துவமனை சாவகச்சேரி), ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-12-94) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;

நா. பரமசிவம்
கிராம உத்தியோகத்தர்
(மீசாலை கிழக்கு)

(34369)


# ராவ் மீது நம்பிக்கை! அமைச்சர்கள் அறிக்கை!!

புதுடில்லி டிச. 26

இந்தியாவின் மத்திய அமைச்சர்கள், இணைஅமைச்சர்கள் சுமார் நாற்பது பேரும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களும் நேற்று ஒன்று சேர்ந்து— கட்சித் தலைவரும், பிரதமருமான நரசிம்மராவுக்கு விசுவாசமும் அவர் மீது நம்பிக்கையும் தெரிவித்து கூட்டறிக்கை ஒன்றை ஒப்பமிட்டு வெளியிட்டனர்.

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அர்ஜுன் சிங். பிரதமர் ராவின் அமைச்சரவையிலிருந்து இராஜினாமாச் செய்து ராவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியிருப்பதை அடுத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

அர்ஜுன் சிங்கின் இராஜினாமாவால் தமக்கு நெருக்கடி ஏற்படவில்லை என்று காட்டவே இத்தகைய கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு பிரதமர் ராவ் ஏற்பாடு செய்திருந்தார் என்றும்—

ஆனால் அத்தகைய கூட்டறிக்கை ஒன்று வெளியிடும் நிலைமை உருவானதே ராவுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை வெளிப்படுத்த போதுமானதாகும் என்றும்—

அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

மேற்படி கூட்டறிக்கையில்— அர்ஜுன் சிங் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் —

இராஜினாமாச் செய்த அர்ஜுன் சிங்கிற்கு மறைந்த ராஜீவ் காந்தியின் மனைவியார் சோனியா காந்தி பின்னணியில் பக்கபலமாக இருப்பதாக புதுடில்லியில் பரவலாகப் பேசப்படுகின்றது.

அது உண்மையானால் - தற்போது ராவின் பின்னால் நிற்கும் கட்சியின் பல மூத்த தலைவர்களும், அமைச்சர்களும் அர்ஜுன் சிங்கின் பின்னால் சாய்ந்து விடுவார் என்று கருதப்படுகின்றது. (உ)

## வாகரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த பஸ்களில் ஒன்றே விடுதலைப் புலிகளின் கண்ணியில் சிக்கி சிதறியது. இதனால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இராணுவத் தரப்புக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

அதனால் படையினர் தாம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கையும் கைவிடப்பட்டது; படையினர் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 4 வார..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகித்தார்.

இப்பதவியை வகித்த ஒரேயொரு சீக்கியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டத்தில் தான்— சீக்கிய பிரிவினைவாதப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்ததும் —

இந்தியப் படைகள் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர் புனிததலமான பொற்கோயிலில் தங்கியிருந்த சீக்கியத் தீவிரவாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்து, பொற்கோயிலுக்குள் புகுந்து சுமார் ஆயிரம் பேரைக் கொன்றொழித்ததும் —

பிரதமர் இந்திரா காந்தி தமது சொந்தப் பாதுகாவலர்களான சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, இந்தியாவில் சீக்கியர்களுக்கு எதிரான வன்செயல்கள் பரவலாக வெடித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஸெயில் சிங்கின் இறுதிச் சடங்குகள் அரச முறைப்படி நாளை புதுடில்லியில் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது. (உ-க)

## சிங்கள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் பேராசிரியர் பி.எல். பண்டிதரத்னவும் வேறு சில சிங்கள அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிலும் சில சிங்கள அறிஞர்கள் வரவேற்கப்பட்டனர்

இம்முறை தஞ்சை மாநாட்டிலும் கலந்து கொண்டு கட்டுரை படிப்பதற்கு கலாநிதி சத்தாமங்கள கருணாரத்ன, கலாநிதி சுதர்ஷன் செனிவிரத்ன, திருமதி சேர்லி மெண்டிஸ், பேராசிரியர் ஏ ஜே. குணவர்த்தனா ஆகியோர் விண்ணப்பித்து அழைப்புக்காகக் காத்திருந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கையருக்கு ஒட்டுமொத்தமாக விதிக்கப்பட்டிருக்கும் கதவடைப்பு சிங்கள அறிஞர்களிடையேயும் பெருத்த ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

''உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை தொடக்கி நடத்திய அமரர் தவத்திரு தனிநாயக அடிகள் பெருமளவில் பிறமொழி அறிஞர்கள் கூடி மாநாட்டில் கலந்து கொண்டு தமிழியல் ஆராய்ச்சி கட்டுரைகள் படிப்பதை ஊக்குவித்ததோடு. அதை நிறைவேற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்த வகையில் இலங்கையிலிருந்து சிங்கள அறிஞர்களைக் கலந்து கொள்ள வைப்பதை ஒரு மரபாகப் பேணியும் வந்தார்''

— என்று தனிநாயகம் மன்ற நம்பிக்கையகத்தின் பொதுச் செயலாளர் ... தெரிவித்தார். (உ)

## புனர்வாழ்வு நடவடிக்கை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல், பாதையைத் திறத்தல், கடல் வலயச் சட்டத்தை அகற்றுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல், யாழ். குடாநாட்டில் உள்ள அகதிகளை மீளக் குடியேற்றுதல் ஆகிய — தமிழ் மக்களின் — அன்றாடப் பிரச்சினைகள் குறித்து முதலில் பேசுவது என முதற்கட்டப் பேச்சுக்களின் முடிவில் இணக்கம் தெரிவித்திருந்த அரசுத்தரப்பினர்—

பின்னர் அந்நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கி, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நேரடியாக — முதலில் — பேசுவோம் என விடுதலைப் புலிகளுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்ததும் —

ஆனால் முதலில் இணக்கம் கண்டவாறு அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின்னரே,இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து ஆராய முடியும் என்று திட்டவட்டமாக! தெரிவித்து விடுதலைப் புலிகள் கடந்த வியாழனன்று அரசுக்கு பதில் அனுப்பியதும் தெரிந்தவையே.

அதன் பின்னர் அமைச்சர் ரத்வத்தை மேற்படி கருத்தை தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என அமைச்சர் தெரிவித்த கருத்து பேச்சு நடப்பதற்கு சாதகமான நிலையை ஏற்படுத்துவதாக இருந்தாலும் —

புலிகள் அடியோடு மறுத்துவிட்ட—ஆனையிறவுப் பாதையைத் திறக்கும்—விடயத்தை மீண்டும் பிரஸ்தாபித்திருப்பது எதிர் விளைவையே ஏற்படுத்துவதாக அமையும் என்று கருதப்படுகிறது.

### தீர்வு யோசனை தயாராகிறது

அமைச்சர் குறிப்பிட்ட கொழும்புப் பத்திரிகைக்கு மேலும் தெரிவித்ததாவது;-

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவிருக்கும் பேச்சுக்களின் போது அவர்கள் முன் சமர்ப்பிப்பதற்கான தீர்வு யோசனைகளை அரசு இப்போது தயாரித்து வருகிறது.

இத்தீர்வு யோசனைகள் குறித்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும்.

★ இரண்டாம் கட்டப்பேச்சுக்காக அரசத் தூதுக்குழு யாழ் செல்வது தாமதமாகின்ற போதிலும் அரசு, புலிகளுடன் பல கடிதங்களைப் பரிமாறிக் கொண்டேயிருக்கிறது.

★ பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஏற்பாடொன்றைச் செய்து கொள்வதற்கு அரசும் புலிகள் இயக்கமும் இணங்கியுள்ளன.

முதலில் இரு வார காலத்துக்கு மோதல் தவிர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும். பின்னர் அது தொடர்ந்து நீடிக்கப்படும்.

### இரு தரப்பினரும் இணக்கம்

★ பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு சுமுக நிலை அவசியம். இதற்கு மோதல் தவிர்ப்பு ஏற்பாடு தேவை என்பதை இரு தரப்பினருமே ஒப்புக் கொண்டுள்ளனர். மோதல் தவிர்ப்பு நடைமுறையின் போது புலிகளும் அரச படைகளும் ஏற்கனவே நிலை கொண்டிருந்த இடங்களிலேயே இருப்பர்.

★ இரண்டாம் கட்டப் பேச்சுக்காக அரச தூதுக்குழு விரைவில் யாழ். செல்லும். முதல் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றிய அதே உறுப்பினர்களே அரசுத் தரப்புத் தூதுக்குழுவில் இடம் பெறுவர்.

★ மோதல் தவிர்ப்பு நடைமுறை தொடர்பாக புலிகளுடன் புரிந்துணர்வை விரிவான முறையில் ஏற்படுத்திக் கொள்வதற்காக பாதுகாப்புப் படை உயரதிகாரி ஒருவரும் இத்தூதுக்குழுவில் இடம் பெறுவார். இந்த அதிகாரி யார் என்பது இன்னும் தீர்மானிக்கப் படவில்லை.

★ முன்னைய அரசாங்கத்தைப் போல பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்க நாம் விரும்பவில்லை.

— இவ்வாறு அமைச்சர் ரத்வத்தை கூறினார். அவரிடம் கேட்டபோது சில கேள்விகளும் அவற்றுக்கு அவர் தந்த பதில்களும் வருமாறு:

கேள்வி:- இப்பேச்சுவார்த்தைகளுக்கு ஐ. தே. க.வும் அழைக்கப்படுமா?

ரத்வத்தை:- நாட்டில் இனப் பிரச்சினைதான் உள்ளது என அவர்கள் ஏற்றுக் கொண்டால், அவர்களும் பேச்சுக்களில் கலந்து கொள்ளத்தானே வேண்டும்?

### விளக்கம் கோரவில்லை

கேள்வி:- புலிகளுடன் முதல் கட்டப் பேச்சுகளில் பங்கு பற்றிய — வடக்கு, கிழக்கு முன்னாள் ஆளுநர் லயனல் பெர்னாண்டோ தொடர்பாக புலிகள் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து அரசு புலிகளிடம் விளக்கம் கோரியுள்ளதா?

ரத்வத்தை:- அது தொடர்பாக நாம் புலிகளிடம் எந்த விதமான விளக்கமும் கோரவில்லை. அது போன்ற சிறு சிறு சம்பவங்களைக் கவனத்தில் கொண்டால் பேச்சுவார்த்தையைத் தொடர முடியாது.

### ஜனவரி முதல் வாரத்தில்?

கேள்வி:- எதிர்வரும் பொங்கல் தினத்துக்கு முன்னர் மோதல் தவிர்ப்பு நடைமுறைக்கு வருமா?

ரத்வத்தை:- நாம் காலக்கெடு ஒன்றை விதிக்க விரும்பவில்லை. கூடிய விரைவில் அது இடம்பெறலாம். சில சமயங்களில் ஜனவரி முதல் வாரத்திலும் இடம் பெறலாம்.

கேள்வி:- இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எப்போது இடம்பெறும்?

ரத்வத்தை:- முடிந்தளவு விரைவில். ஆனால் இந்த வருடத்துக்குள் அல்ல.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என நாம் கூறிய வார்த்தையிலிருந்து வழி தவறப் போவதில்லை. அந்த நோக்கத்தை அடைய சகல வழிகளையும் கையாளுவோம். (உ)

## ஜனவரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத் தரப்பினரும் பங்குபற்ற வேண்டும். என்று விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதை அடுத்து —

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கான ஒரு படை அதிகாரியை தெரிவு செய்வதற்காக ஐந்து இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

— இவ்வாறு ''திவயின'' மேலும் தெரிவித்தது.

## தாதியர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நாட்டில் ஆஸ்பத்திரிகளும், மருத்துவ சேவைகளும் முற்றாக செயல் இழக்கும் என்றும் தென்பகுதி செய்தி வட்டாரங்கள் குறிப்பிட்டன. (உ)

## அபிவிருத்திநிதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி வங்கி, ஐக்கிய அமெரிக்க பி. எல். - 40 திட்டம். மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

எல்லாமாக 733 திட்டங்களுக்கு 21 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 10 கோடி 80 லட்சம் ரூபாவே இதுவரை செலவிடப்பட்டிருக்கிறது எஞ்சிய நிதியே திருப்பியனுப்பப்படவிருக்கிறது

1994 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் சில தினங்களே இருப்பதால் இவ்வாண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திருப்பியனுப்பப்படுவது தவிர்க்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்ட போது—

''நிதி ஒதுக்கீடுகள் வருட ஆரம்பத்தில் செய்யப்பட்டாலும் அதற்குரிய கட்டுநிதி ஏப்ரல், மே மாதங்களின் பின்பே கிடைக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவமழை அக்டோபர் இறுதியில் ஆரம்பித்து விடுகிறது. இடையில் உள்ள நான்கு ஐந்து மாதங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது இயலாத காரியம்.

''மேலும் இவ்வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த சிமெந்துத் தட்டுப்பாடும் நிலவியது. அதோடு ''கிரவல்'' மண் எடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது''— என பதிலளிக்கப்பட்டது. (உ)

## இன்று

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் வாலிபர் சங்கத்தால் நடத்தப்படும் நத்தார்க் கலை நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

கொழும்புத்துறை, டிச. 26

ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தின் அறவழி சிறுவர்கள் கல்விப்பூங்காவின் ஆண்டு விழா நிகழ்வுகளும், பரிசளிப்பு வைபவமும் கல்விப் பூங்காவின் அபிவிருத்திச் சபையின் தலைவி திருமதி ஜெ சிவலோகநாயகி தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(க-30)

## பாப்பரசரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக் கத்தோலிக்க மக்கள் கொழும்பு வருவதற்காக ஆனையிறவுப் பாதையைத் திறப்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கத்தோலிக்க திருச்சபையும் அரசாங்கமும் பேச்சுக்களை நடத்தும் — என்றும் ஆயர் வண. மல்கம் ரஞ்சித் மேலும் தெரிவித்தார்.

பரிசுத்த பாப்பரசரின் விஜயம் சம்பந்தமான ஒழுங்குகளைக் கையாள்பவர் வண. மல்கம் ரஞ்சித் ஆவார். அவர் தாம் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே முன் கண்டவாறு தகவல் கலைத் தெரிவித்தார்.

ஏழாயிரம் பேருக்கு மேலதிகமாகவும் பலருக்கு கொழும்பு வருவதற்கு வாய்ப்பளிப்பது குறித்து இப்போது பரிசிலனையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


விசேட மலிவு விலை!

திருமாட்டி (புடைவைக் கடல்)

(சீமாட்டி)

நத்தார், புதுவருடப் பண்டிகைகளைச் சிறப்பிக்க பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட தரமான, புத்தம் புதிய புடைவைத் தினுசுகள் விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றன!

* யப்பான் சாறிகள்
* அமெரிக்கன் ஜோர்ஜெட் சாறிகள்
* பூனம், பட்டர் ஃபிளை சாறிகள்
* சிபோன் சாறிகள்
* விஸ்கோஸ் துணிவகைகள்
* பாட்டி ஃபுறக்குகள்
* பிறின்டெட்-பிளேன் ரீகு பலஸ் துணிகள்
* சித்தை, பப்பிலின்

மற்றும்

* சூட்டிங் * சேட்டிங்
* சேட் * ரீசேட் வகைகள்

இன்னும் பலப்பல புடைவைத் தினுசுகளுக்கு

இன்றே நாடுங்கள்:

திருமாட்டி (புடைவை கடல்)

(சீமாட்டி)

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-43]

## மரண அறிவித்தல்

### செல்வன் சிவசங்கரன் சண்முகராசா (சண்முகம்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் சிவசங்கரன் சண்முகராசா (சண்முகம்) நேற்று மாலை அகால மரணமானார்.

இவர் த சிவசங்கரன் (முன்னாள் சாறி எம்போறிய ஊழியரும், சின்னத்துரை அன் பிறதர்ஸ் காசாளரும்) இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும்— சிவராசன், கணேசராசா (கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி), காலஞ்சென்ற சிவசக்தி (அரசியல் விஞ்ஞான பீட மாணவி யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனேஸ்வரி, பிரேமகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேனுசன், சதுர்சன், ஜதீஸ்வரன், ஆரணி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 4 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. கணேசராசா (சகோதரர்)

கணேசன் களஞ்சியம்,
திருநெல்வேலி.

(34371)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (றைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26—12—94 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org